எம்.சி.ஓ.பி எண்: 61/2025 தேதி: 02.07.2026

எ,மசா. : 1

பெயர் : ஜவகர்

த/பெ. : செந்திமிழ்செல்வன்

வயது : 35

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ,மசாஆ 2 முதல் 5 வரை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை பற்றி நேரடியாக தெரியாது. கோப்புகளின் அடிப்படையில் சாட்சி அளிக்கிறேன். நான் இந்த வழக்கிற்கு புலன் ஆய்வு அதிகாரி கிடையாது. விபத்தில் இறந்த நபர் மது போதையில் இருந்தார் என்பதற்கு மருத்துவ ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. TN–20–AH–6048 இந்த வண்டிக்கு விபத்து சமயத்தில் எப்சி பெர்மிட் இல்லை என்று பிரமாணாவாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது. எமசாஆ 3 08.05.2026 அன்று வழக்கறிஞர் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த கடிதம் 1ம் எதிர்மனுதாரருக்கு சென்றதா என்றால் சார்வு செய்யாமல் திரும்பிவந்துவிட்டது. அதுபோல் ஆள் இல்லை என்று திரும்பியது. அதன் பிறகு அவர் மீது மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. எமசாஆ 5 ல் 1வது எதிர்மனுதார் வாகனத்திற்கு முன்பக்கம் முழுவதும் சேதம் அடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த வண்டியின்மீது தான் குற்றப்பத்திரிக்கை பதிவாகி உள்ளது. விபத்து நடந்த நேரத்தில் அந்த வண்டிக்கு முழுமையாக காப்பீடு இருந்தது என்றால் சரி. இந்த விபத்தில் இறந்து போனவர் பாலீசி விதிமுறையின் படி 3 ம் தரப்பினர் என்றால் சரி. அதனால் எங்கள் காப்பீடு நிறுவனம்தான்இழப்பீடு தரவேண்டும் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.